## தமிழ்நாட்டில் பயிர்க்கடன் வழங்குவதில்

# கழக அரசின் வரலாற்றுச் சாதனையை மூடி மறைத்துவிட முடியாது!

## சட்டப்பேரவையில் - கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை, பிப். 23 –**


**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் செல்லூர் கே.ராஜூ கலந்துகொண்டு பேசியபோது, அவரது பேச்சில் நடுவே குறுக்கிட்டு, தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறை மூலம் பயிர்க் கடன்கள் வழங்குவது குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் புள்ளி விவர ஆதாரங்களுடன் விளக்க மளித்தார்.**

அப்போது அவர், "தமிழகத்தில் பயிர்க் கடன் வழங்குவதில் கழக அரசின் வரலாற்றுச் சாதனையை வழங்குவதில் மறைக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**செல்லூர் ராஜூ :** 2011 முதல் 2021 வரைக்கும் 10 ஆண்டுகளில் ஒரு கோடியே 6 இலட்சத்து 98,452 விவசாயிகளுக்கு 60,646 கோடி ரூபாய் பயிர்க்கடன் கொடுத்து விவசாயிகளுக்கு ஒளியேற்றி வைத்தது அம்மாவினுடைய அரசு. அண்ணன் எடப்பாடி அரசு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதே மாதிரி (குறுக்கீடு)

**அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்:** பயிர்க் கடன் கொடுப்பதில் நீங்கள் எந்தளவிற்கு இருந்தீர்கள் என்றால், 2011-2021 உங்களுடைய 10 ஆண்டு ஆட்சிக்காலம் வரை சராசரியாக 10 ஆண்டுக்காலத்தில் 6,000 கோடி ரூபாய்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இந்த அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, முதற்கட்டமாக 10 ஆயிரம் கோடியைத் தாண்டியது இந்த அரசில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு 12 ஆயிரத்து 600 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இலக்கில் இன்று வரை 14 ஆயிரம் கோடி ரூபாயை எட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் உரக்கக் குரல் கொடுத்தாலும், இந்த வரலாற்றுச் சாதனையை மூடி மறைத்துவிட முடியாது என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.



**அமைச்சர் தங்கம் தென்னரசு:** உறுப்பினர் செல்லூர் ராஜூ பேசுகிறபோது, கொரோனா காலத்தில் அள்ளிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். உண்மையிலேயே கொரோனா காலத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்த வள்ளல் முதலமைச்சர் இங்கே இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அமைச்சர் துரைமுருகன்:** ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்றை தெரிவித்துக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்கள், இன்றைக்கு வழக்கத்துக்கு மாறாக மிகவும் correct ஆக இருக்கிறார்கள். உறுப்பினர்கள் யாருக்கும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசுவதற்கு அனுமதி கிடையாது; எழுந்துவிடுவார். அதனால், உறுப்பினர் செல்லூர் ராஜூ அவர்கள், நம்மைப்பற்றி குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்பதால், அவர்களுடைய ஆட்சியில் செய்தவற்றை யெல்லாம் சொல்லிட்டு, பத்து நிமிடங்களில் பேச்சினை முடிக்கப் பார்க்கிறார். (சிரிப்பு) நம்மிடம் அவர் வரவில்லை. உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**செல்லூர் ராஜூ :** நாங்கள் கூட்டுறவு வங்கிகளில் நிதிநிலையைப் பெருக்கி, மாவட்ட வங்கிகள் அனைத்தையும் online வர்த்தகத்திற்குக் கொண்டு வந்தது, டெபாசிட்டைப் பெருக்கியதால் தான், தற்போது உங்களால் பயிர்க் கடன் கொடுக்க முடிகிறது. அது நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கிய நிதியிலிருந்து கொடுக்கும் நிதியல்ல.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** உறுப்பினர் செல்லூர் ராஜூ அவர்கள் குறிப்பிடுவதைப்போல, டெபாசிட்டை அதிகமாக வாங்கி வைத்திருந்தார்களேயானால், அந்த நேரத்திலேயே அவர்கள் கொடுத்திருக்க வேண்டியதுதானே! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பத்தாண்டுக்கால சராசரியாக 6 ஆயிரம் கோடி ரூபாய்தான் இருந்திருக்கிறது. ஆனால், நாங்கள் தற்போது 13 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி, 16,500 கோடி ரூபாய் என்ற இலக்கை நோக்கிச் செல்கிறோம் என்றால், இது சாதனையா? அது சாதனையா?

**செல்லூர் கே.ராஜூ:** நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எவ்வளவு அற்புதமாகப் பேசினார்! கேட்டுக் கொண்டே இருக்கலாம்; கேட்டுக் கொண்டே இருக்கலாம். அப்படிப் பேசினீர்கள். உங்களுடைய சட்டை அழகு, நீங்கள் பேசியது அழகு, உங்கள் தமிழ் அழகு, ஒரு பேராசிரியருக்குரிய இலக்கணம். அப்படியிருந்தது. ஆனால், எல்லாமே இருந்தும், சரக்கு இல்லையே! சரக்கு இருந்தால்தானே நன்றாக இருக்கும்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி உண்டு. அது பழமொழிதான். அந்தப் பழமொழியை அப்படியே சொல்கிறேன். "சரக்கு மிடுக்கா செட்டியார் மிடுக்கா" என்று ஒரு பழமொழி உண்டு. இந்த பட்ஜெட்டில் சரக்கும் மிடுக்கு. அந்த பட்ஜெட்டை உருவாக்கிய முதலமைச்சர் அவர்களும் மிடுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்லூர் கே. ராஜூ:** எங்கள் ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்களை அதிகமாகச் செய்தோம். குறைந்த கடன் வாங்கினோம். ஆனால், இன்றைக்கு நல்ல பல திட்டங்களை, கோழிக்குஞ்சை கொடுப்பதை நிறுத்திவிட்டீர்கள்; கிராமப்புற பெண்களுக்கு பசுமாடு கொடுப்பதை நிறுத்திவிட்டீர்கள்; தாலிக்குத் தங்கம் கொடுப்பதை--பெண்களுடைய வாழ்க்கையை வசமாக்குவது; மாணவர்களுக்குக் கொடுக்கிற மடிக்கணினியை, (குறுக்கீடு).

**அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்:** நீங்கள் தருகிற அதிகமான சுதந்திரத்தை உறுப்பினர் தவறான வகையில் தகவலைப் பதிவு செய்கிறார். அனைத்துக் கடன்களும் கொடுக்கப்படுகின்றன. கால்நடைகள் கொடுக்கப்படுகின்றன. அவர் சொல்வதைப்போல கோழிக்குஞ்சுகளும் கொடுக்கப்படுகின்றன. எல்லாம் கொடுத்து, கடந்த இலக்குகளைவிட, சாதனையைவிட 5 மடங்கு இன்றைக்கு போய்க்கொண்டிருக்கிறது. அவர் ஏதோ ஒன்றைச் சொல்கிறார். நீங்களும் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். தயவு செய்து அதை அனுமதிக்க வேண்டாம். அனைத்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

## பாசிசத்தை வீழ்த்திக் காட்டி

# எங்கள் உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுச் சிறப்புக்குரியவர் முதல்வர்!

## சட்டப்பேரவையில் - சி.வி.எம்.பி.எழிலரசன் பேச்சு!

**சென்னை, பிப். 23–**

**"பாசிசத்தை வீழ்த்திக் காட்டி, எங்கள் உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுக்குரியவர், எங்கள் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்!" என்று, சட்டப்பேரவையில் நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காஞ்சிபுரம் தொகுதி கழக உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

இந்த ஆண்டு நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினை வழங்கிட்ட நம்முடைய கழகத்தின் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு பேசியதைப்போல, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை வணங்கியும், தமிழ்நாடு வழங்கிட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை வணங்கியும், செம்மொழி தமிழை நமக்கு வழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, இன்று அவர் துவங்கிய அதே உரையை நானும் வழிமொழிந்து, அவர் வழியில் வருங்கால தமிழகத்தை வழிநடத்த நம்பிக்கையோடு நாங்கள் காத்திருக்கும் எங்களின் இளம் தலைவர் தளபதி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்தப் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றுகிற வாய்ப்பினை வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், அனைவருக்கும் என்னுடைய அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பட்ஜெட்டைப் பார்க்கிறபோது அங்கே நிதிநிலையில் இருக்கிற எண்ணிக்கைகள் தெரியவில்லை, அதில் பயன்பெறுகிற பயனாளிகள் தான் என் கண்ணுக்கு தெரிகிறது. இது மக்களுக்கான பட்ஜெட்டாக, அனைவருக்கும் அனைத்தும், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியினுடைய பட்ஜெட் விளக்கம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் உரையாற்றுகிறபோதெல்லாம் சங்கத் தமிழ் பாடல்கள் இடம்பெறும், அவரது உரையே பல நேரங்களில் கவிதையாகக் காட்சியளிக்கும். நமக்கு காதுகள் இனிக்கும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில், மக்களுக்குக் கவிதையாகவே நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கிறார் அதற்காக அவர்களுக்கு நாங்கள் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தடைகளைக் கடந்து வளர்ச்சியை நோக்கியது இந்த நிதிநிலை அறிக்கை. எப்படிப்பட்ட தடைகள் என்று சொன்னால் பேரிடர்கள். பேரிடர் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருவது அவரே குறிப்பிட்டதைப்போல 'It's a twin disaster' என்று சொன்னார்கள். இரண்டு பேரிடர்கள் என்று சொன்னார். ஒன்று இயற்கையின் பேரிடர், மற்றொன்று செயற்கையின் பேரிடர். இயற்கைத் தந்தப் பேரிடரை சென்னையும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களும் அறிந்தது. தூத்துக்குடி அதைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் அறிந்தது. செயற்கைப் பேரிடர், நம்முடைய ஒன்றிய அரசு தந்திருக்கக்கூடிய பெரும் பேரிடர், நிதி நெருக்கடி பேரிடர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதையும் கடந்து வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை இது. இந்த நிதிநிலை அறிக்கையில், கலைஞரின் கனவு இல்லம் என்று ஒரு திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. கலைஞரின் கனவு இல்லம் என்பது மிக நீண்ட நெடிய காலத்திற்கான கனவு என்று சொன்னார்கள்.

1975 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, குடிசைகளற்ற தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக ஏற்கெனவே அவர் தொடங்கிவிட்ட கனவு அது. அதை காலங்காலமாக நிறைவேற்றி வந்திருந்த நிலையில், இப்போது உருவாக்கியிருக்கின்ற நிலையின்படி கண்டெடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் என்னவென்றால், ஒன்றிய அரசினுடைய NITI Aayog வழங்கியிருக்கக்கூடிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் multidimensional என்று சொல்லக்கூடிய வகையில் poverty line-வறுமைக்கோட்டிற்குக் கீழே 2.2 சதவிகிதம் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்கள் என்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 2.2 சதவிகிதம் இருப்பவர்களையும் நாங்கள் கண்டெடுப்போம் என்று சொல்லி, அதற்காக ஒரு திட்டத்தினை தலைவர் அவர்கள் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இது ஒரு பக்கம் என்றால், 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம் என்பது பெயர் மாற்றப்பட்டு வந்த திட்டமல்ல, கலைஞரின் உண்மையான கனவு திட்டம் அது. ஏன் இதைக் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால், இன்றைக்கு பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திற்கு 2.1 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது என்றால் அதில் 72 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு. மீதமெல்லாம் தமிழ்நாடு அரசினுடைய பங்களிப்பாக இருக்கக்கூடியது. ஆனால், இதில் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு மாநில அரசின் பங்களிப்பால் 3.5 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டப்பட இருக்கக்கூடிய வீடுகள் என்பதை மறந்துவிட கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது முழுக்க முழுக்க மாநில அரசால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கலைஞரின் கனவு இல்லத்தை ஓராண்டிற்கு ஒரு இலட்சம் வீடுகள் என்று வழங்க இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் NREG-கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கண்டெடுக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, ஒன்றிய அரசில் இடம் பெற்றிருந்த கூட்டணியின் மூலமாக, மன்மோகன்சிங் அவர்களிடம் கேட்ட கோரிக்கை அது. Micro economics என்று பொருளாதார நிபுணர்களால் பாராட்டப்படுகிற திட்டம் அது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு குறைந்தபட்டம் 100 நாட்கள் வேலைவாய்ப்பை தர வேண்டுமென்று உருவாக்கப்பட்ட திட்டம் அது. அந்தத் திட்டத்தினை குறைந்து, குறைந்து என்று சொல்லி இப்போது ஒன்றிய அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் 30 சதவிகிதம் அளவிற்கு நிதியைக் குறைத்திருக்கக் கூடிய நிலையில், தமிழ்நாட்டில் 3,300 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்வேன் என்று வழங்கியிருக்கக்கூடிய திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்று யோசித்து பாருங்கள். ஒரு ஆண்டு முழுவதற்கும் 92 இலட்சம் பேர் அதில் பயன்பெறுகிறார்கள்.



78 இலட்சம் பேர் பெண்கள் மட்டுமே அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தினை வழங்கியிருக்கிறார்கள் முதல்வர் அவர்கள். நான் கோரிக்கையாக நிதியமைச்சர் அவர்களுக்கு வைக்கக்கூடியது என்னவென்றால், நம்முடைய தேர்தல் அறிக்கையில் வைத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளில் ஒன்று 300 ரூபாய் வரைக்கும் உயர்த்துவேன் என்று. முதலமைச்சர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 294 ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்படுமென்று சொல்லியிருக்கிறார். இன்னும் 6 ரூபாய் சேர்த்து 300 ரூபாய் வழங்கிவிட்டால், 300 ரூபாய் வழங்கிவிட்டோம் என்று அந்த இலக்கை அடைந்த மாநிலமாய் நம்முடைய மாநிலம் அமைந்துவிடும் என்பதற்காகவே நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிராமப்புறம் என்றாலே, குடிநீர் வடிகால் வாரியத்தைக் கொண்டுதான் ஒட்டுமொத்தமாக 1970 ஆம் ஆண்டுகளிலே பாதுகாக்கப்பட்ட குடிநீரை விநியோகிக்கின்ற திட்டத்தினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். இன்றைக்கு யோசித்து யோசித்து Jal Jeevan Mission என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 20 கோடி பேருக்கு தண்ணீர் வழங்குகிறோம் என்று பிதற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு, 50 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே பாதுகாக்கப்பட்ட குடிநீரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து கிராமங்களிலும் வழங்கியர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்களில் குடிசை மாற்று வாரியம் என்பது கடந்த கால ஆட்சியில் முடக்கி போடப்பட்டு, அப்படி ஒரு துறை இருக்கிறதா என்று தெரியாத அளவிற்கு போய்விட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்கு செல்கின்ற நேரங்களிலெல்லாம் மக்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கை இருக்கிறது. அதைக் கண்டெடுத்து, இன்றைக்கு 2 ஆயிரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்படும் என்று வழங்கியிருக்கிறார்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

கடந்த காலங்களில் குடிமராமத்து பணி என்ற பெயரால் சொல்லப்பட்டது. ஏரிகள் தூர்வாரப்பட்டதா, இல்லையா என்பது தெரியாது. ஆனால், 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக செலவழிக்கப்பட்டது மட்டும்தான் பட்டியலில் வந்திருக்கிறது. ஆனால், இப்போது சொல்கிறேன், 5 ஆயிரம் நீர்நிலைகள் கிராமப்புறங்களில் இருக்கக்கூடியதை கிராமப்புற மக்களைக் கொண்டே அங்கேயே நாங்கள் நிர்வகிப்போம், செய்து காட்டுவோம் என்று சொல்லியிருக்கிறாரே, இந்த நீர்நிலைகளை பாதுகாப்பதன் மூலமாக, பெரும் நீர்நிலை களினுடைய நிலத்தடி நீர் நிலையை உயர்த்துகின்ற வகையில் நிலத்தடி நீர் நிலைகளை முறைப்படுத்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் என்பது முக்கியமான ஒரு திட்டமாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். 1,000 கோடி ரூபாயில் ஏற்கெனவே நிறைவேற்றப்பெற்றிருக் கிறது. பல கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சாலையாக இருக்கிறது. கப்பி சாலையாக அல்ல; BT சாலையாகவே உள்ளது. அதை இந்த ஆண்டும் நீட்டித்து தரப்படுவதாக சொல்வது கிராமப்புறங்க ளுக்கும், நகர்ப்புறங்களுக்கும் ஓர் இணைப்பு. ஏனென்றால் நகரமயமாதல் என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 55 சதவிகிதத்தை கடந்துவிட்ட நிலையில் இருக்கிறது.

ஆனால், அதை கிராமப்புறத்தில் இருக்கிறவர்கள், கிராமப்புறத்தில் இருந்துகொண்டே அவர்கள் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு நகர்ப்புறத்திற்கு connectivity என்று சொல்லக்கூடிய சாலைகளை உருவாக்கித் தருகிற திட்டம் அது என்று சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) உருவாக்கி மீண்டும் mini bus திட்டம் வரும் என்று உருவாக்கியிருக்கிறார்கள் இந்தத் திட்ட த்தினை. . .

பா.ஜ.க அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் பெயரைச் நான் சொல்வதற்குக்கூட கூச்சமாக இருக்கிறது. ஏனென்றால் அப்படி ஒரு பெயரை சில சாதியினர் எங்கள் பெயரைக் குறிப்பிட்டு எங்களை இழிவுபடுத்துவதாக அந்தத் திட்டம் இருக்கிறது என்று எங்களிடம் குறைபட்டா ர்கள். அது எதுவென்று சொன்னால் குலத் தொழிலை ஏற்படுத்துவோம் என்று ஒரு திட்டத்தினை அறிவிக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. ஆனால், மாற்றாக எங்களுடைய தலைவர் அவர்கள், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கைவினை மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். யாருக்கெல்லாம் எதில், அவர் பிறப்பால் அல்ல, அவருடைய திறனால், அவருடைய ஆர்வத்தால் எந்தத் துறையில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ அதை மேம்படுத்துவதற்கான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், ஒன்றிய அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால், எந்தப் பிறப்பில் நீ பிறந்தாயோ அந்தப் பிறப்பின் அடிப்படையில் உன் மூதாதையர் செய்யக்கூடிய தொழிலை நீ செய்வதற்கு முன்வருவாயேயானால் உனக்கு நிதி தருகிறேன் என்று சொல்லக்கூடிய சனாதனத்தை எதிர்க்கக்கூடிய திட்டத்தை இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே வாக்குகளுக்கான, தேர்தலுக்கான நிதிநிலை அறிக்கை இதுவல்ல. ஏனென்று சொல்கிறேன் என்றால், வாக்குகளைக் கடந்து வாழ்கிற மக்களுக்கான நிதிநிலை அறிக்கை இது. எப்படி சொல்கிறேன் என்று சொன்னால் cancer என்று சொல்லக்கூடிய, புற்றுநோயால் பாதிக்கக்கூடியவர்கள் எத்தனை ஆயிரங்கள், எத்தனை இலட்சங்கள் இன்று உருவாகியிருக்கிறது. இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல அருகிலிருக்கிற ஆந்திர, தெலங்கானா போன்ற மாநிலத்தைச் சார்ந்தவர்களும் பாதிக்கப்படுகிறவர்கள் நாடி வரக்கூடிய இடம் ஒன்று அடையாறில் இருக்கக்கூடிய Cancer Institute என்று சொன்னால், மற்றொன்று சென்னையிலிருக்கக்கூடிய அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை. இந்தியாவிலேயே Tata Memorial Hospital என்று சொல்லக்கூடிய Cancer Institutetதான் இன்றைக்கு 600 படுக்கைகளோடுகொண்டு பல வசதிகளைக் கொண்ட ஒரு மருத்துவமனை. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இன்றைக்கு என்ன நிலவரம் என்று சொன்னால் 750 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாக உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் Palliative care என்று சொல்லக்கூடிய. . .

Palliative care என்று சொல்லக்கூடிய அதையும் உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்குகிறார்கள் என்று சொன்னால் அனைத்துத் தரப்பு மக்களுக்கான ஒரு திட்டத்தை தந்துகொண்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் நாம் எப்படிப்பட்ட நெருக்கடி நிலையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். நன்றாக கவனித்துப் பாருங்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னேன். ஒன்றிய அரசு தருகிற நிதியில் நம்மிடம் இருந்து பெறுகிற வரிப் பணத்திலிருந்து 15th Finance Commission பரிந்துரைக்கப்பட்டிருக்கக்கூடிய 41 சதவிகிதத்தை நமக்கு தரவேண்டும். ஆனால், தருவதற்கு மாறாக 30 சதவிகிதத்தைத்தான் தருகிறது. காரணம் அந்த common pool என்று சொல்லக்கூடிய divisible pool-லிலிருந்து வழங்க வேண்டியதைத் தராமல் cess என்று surcharge-ல் எடுத்துக்கொண்டு மீதத்தில் இருக்கக்கூடியதை (மணியடிக்கப்பெற்றது) ஒரு ரூபாயில் என்று சொல்வதற்குப் பதிலாக. . .

ஆகையினால் நமக்குத் தர வேண்டிய தொகை பரிந்துரைத்ததைவிட 10 சதவிகிதம் குறைகிறது. இது ஒரு பக்கம் என்றால், இன்னொரு வஞ்சனை என்னவென்று சொன்னால் அதாவது, participation என்று சொல்லக்கூடிய ஒன்றிய அரசினுடைய பங்களிப்போடு நடைபெற வேண்டிய திட்டங்களுக்கும் நிதி குறைவாக தருகிற நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். வீடு கட்டும் திட்டத்திற்கு சொன்னேன். அதேபோலத்தான் crop insurance-லும் அவர்களுடைய பங்களிப்பு 49 சதவிகிதம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு 33 சதவிகிதம்தான் தருகிறார்கள் என்று சொன்னால் எல்லாத் திட்டங்களிலும் ஒன்றிய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது.

அண்ணா அன்றைக்கே சொன்னார், நாங்கள் கோரிக்கை வைத்தோம், அந்த கோரிக்கையில் என்ன சொல்கிறார் என்று சொன்னால், ஒரே வார்த்தையில் சொல்கிறேன். முறையிடுகிறேன், கனிவும், பணிவும் குறையாமல் வம்பு வல்லடி போக்கு துளியுமின்றி, ஆனால், கிடைக்கிறதா? நிரம்பக் காரணங்கள், நியாயங்கள், வாதங்கள், எதற்கு? எவ்வளவுக்குமேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு ஏன் செய்வேன் என்று கேட்டிருக்கிறார்கள் அண்ணா அவர்கள். அன்றைக்கு முதலமைச்சராய் 1968-லே கேட்ட குரல், இன்றைக்கு 2024-லிலும் அதேக் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. காரணம், மாநில சுயாட்சி நமக்கு தேவை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நாம் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதனை நிருபிக்கக்கூடிய தேர்தல் வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) உரிமைகளை மீட்டெடுப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி மீட்டெடு திருவாளர், (மேசையைத் தட்டும் ஒலி) பாசிசத்தை ஸ்டாலின் அவர்கள்தான் வீழ்த்தியிருப்பது வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை எங்களுடைய தலைவர் அவர்கள் வீழ்த்திக் காட்டி உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுக்குரியவர் எங்களுடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் வருகின்ற தேர்தலிலே மீட்டுக் காட்டுவார் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேசினார்.



பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காமராஜர் வளைவு, புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார்,வீ.ஜெகதீசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல் பாரூக், மாவட்ட கவுன்சில் தலைவர் ஆர்.ரெங்கசாமி, எம்.மணிவாசகம், அ. அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், பா.ரினோபாஸ்டின், சபியுல்லா, ந.முத்துக்குமார், து.ஹரி பாஸ்கர், ரகமத்துல்லா, சித்தார்த்,நல்லுசாமி,சேகர், மணிவேல், தங்க.சண்முகசுந்தரம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.